بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

10 ஸஃபர் 1441 ஹிஜ்ரி கமரி 10 அஹா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
10 அக்டோபர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

قَدْ خَلَتْ مِنْ قَبْلِكُمْ سُنَنٌ ۙ فَسِيْرُوْا فِي الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ○

உங்களுக்கு முன்னர் எத்தனையோ செயல்முறைகள் சென்று விட்டன. (அவற்றின் விளைவுகளைப் பார்க்க வேண்டுமாயின்) நீங்கள் பூமியில் சுற்றித்திரிந்து (தூதர்களைப்) பொய்யாக்குவோரின் முடிவு எத்தகையது என்பதைப் பாருங்கள். (3:138)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எவர் நபியை அடையாளங்கண்டு கொள்கிறாரோ அவர் அறிவாளி ஆவார். ஏனெனில் அவர் இறைவனை அடையாளங்கண்டு கொள்கிறார். மேலும் நபியை மறுப்பவர் அறிவற்றவர் ஆவார். ஏனெனில் நபித்துவத்தை மறுப்பது இறை மறுப்பைக் கட்டாயமானதாக ஆக்கி விடுகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## இறைவனின் ஆற்றல்களையும் அற்புதங்களையும் எல்லைக்குட்பட்டதாகக் கருதுவது புத்திசாலித்தனம் அல்ல

இறைவனின் ஆற்றல்களையும் அற்புதங்களையும் எல்லைக்குட்பட்டதாகக் கருதுவது புத்திசாலித்தனம் அல்ல. அவன் தன் நிலையை அறிவதில்லை. மேலும் புரிவதில்லை. மேலும் வானத்து விவகாரங்களில் கருத்து தெரிவிக்கின்றான். இவ்வாறான மக்களைப் பற்றி கூறப்படுவதாவது: நீர் முதலில் பூமியின் நிலைகள் மாறுதலை மறுத்ததன் பின்னர் வானத்தை பற்றிப் பேசலாம். மனிதன் தனது தகுதிக்கு மீறிய விதத்தில் பாதத்தை நிச்சயமாக வைக்கக்கூடாது. பெரும்பாலான நோய்கள் மற்றும் நோய் வருவதற்கான காரணிகள் மற்றும் அறிகுறிகள் மருத்துவர்களுக்கு தெரியவில்லை எனில் இந்த பலவீனத்தின்போது தமது தகுதியை மீறி செயல்படுவது அவருக்குப் பொருத்தமானதா என்ன? ஒருபோதும் இல்லை. மாறாக, அடியார்களின் வழி سُبْحٰنَكَ لَا عِلْمَ لَنَا (2:33) என்று கூறுபவர்களுடன் இணைந்து விடுவதாகும்.

பாருங்கள்! நட்சத்திரங்கள் பெரிய பெரிய உருண்டைகள் ஆகும். வானத்தில் எந்த தூணும் இன்றி தொங்குகிறது. மேலும் ஆயிரக்கணக்கான வருடங்கள் எந்த ஊன்றுகோலும் இன்றி வானம் இவ்வாறே இருந்து வருகிறது. சந்திரன் ஒவ்வொரு நாளும் புத்தம் புதிதாக வெளிவருகிறது. சூரியன் தினமும் உதிக்கிறது. மேலும் சீரான வேகத்தில் செல்கிறது. நமது வேலைகளில் ஏதேனும் தவறு நிச்சயம் ஏற்படுகின்றது.

ஆனால் இறைவனின் வேலையைப் பாருங்கள். இந்த சந்திரனும் சூரியனும் தமது ஒரே வழிமுறையில் செல்கிறது. சூரியன் ஒவ்வொரு நாளும் நிர்ணயிக்கப்பட்ட முறையில் உதிக்கிறது. தன்னோடு உள்ளதையும் சுற்றச் செய்கிறது என்பதை தினமும் சிந்தியுங்கள். பாருங்கள் நம்மீது எத்தனை நிலைகள் வருகின்றன. மேலும் சூரியனுக்கு எந்த நிலையும் வருவதில்லை.

இரண்டாயிரம் ரூபாய்க்கான ஒரு கடிகாரம் பன்னிரெண்டு மணிக்கு பதிலாக பத்து மணியையும் மேலும் பத்து மணிக்கு பதிலாக பன்னிரெண்டு மணியை காட்டினால் அது குறையுள்ளதும் பயனற்றதாகவும் கருதப்படும். ஆனால் இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட கடிகாரம் எவ்வாறானது என்றால் அதில் சிறிதளவும் வித்தியாசம் இல்லை. மேலும் அதற்கு சாவி கொடுக்கும் வேலையும், சுத்தப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை.

இவ்வாறான படைப்பாளனின் ஆற்றல்களை கணக்கிட முடியுமா என்ன? நமது பொருட்கள், உடைகள், பாத்திரங்கள் போன்றவை பயன்பாட்டிற்கு வருகிறது தேய்ந்து கொண்டே செல்கிறது. குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் ஆன பிறக மரணித்து விடுகிறார்கள். ஆனால் எந்த சூரியன் நேற்று உதித்ததோ இன்றும் அதே சூரியன்தான் உள்ளது. மேலும ஒரு நீண்ட காலமாக இவ்வாறே இருந்து வருகிறது. இருந்து கொண்டே இருக்கும்.

ஆனால் அதன் மீது எவ்வித நிலைமாற்றம் போன்றவை அல்லது காலத்தின் தாக்கம் ஏற்படுவதில்லை என்பதை மனிதன் பார்க்கும்போது வியப்பிற்குள்ளாகின்றான். ஒரு புழுவாக இருந்து கொண்டு அந்த உயர்வான இறை இருப்பின் மீது தாக்குதல் தொடுப்பது மேலும் இறைவனுக்கு ஆற்றல் இல்லை என விரைவில் கூறிவிடுவது எவ்வளவு மடமையாகும்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களின் குறிக்கோள்

இஸ்லாத்தின் இறைவன் பெரும் ஆற்றல்களின் இறைவன் ஆவான். அவனின் ஆற்றல்கள் மீது ஆட்சேபணை செய்வதற்கு யாருக்கும் உரிமை இருப்பதில்லை. நபிமார்கள் (அலை) அவர்களுக்கு எந்த ஆச்சரியங்கள் வழங்கப்படுகிறதோ அதற்கான காரணம் இதுவாகும். மனிதனை அனுபவங்கள் அறிந்து கொள்வதில்லை. மேலும் அறிதாக நிகழும் இந்த காரியங்களை மனிதன் பார்க்கும்போது இது இறைவன் புறமிருந்துள்ளது என ஒருமுறை கூறும் கட்டாயத்திற்கு உள்ளாகின்றான். ஆனால் தமது அறிவின் வாதத்தை செய்து மேலும் இறைஞானத்தின் வழியில் பாதத்தை வைக்கவில்லை எனில் இரு புறமும் வழிகள் அடைபட்டு விடுகிறது. ஒருபுறம் அற்புதங்களை மறுப்பது, மறுபுறம் அறிவின்மையின் வாதம், அதன் விளைவு என்னவாகும் எனில், எந்த நுட்பத்திலும் நுட்பமான விஷயத்தின் விவரத்தை அறிந்து

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வால் வரையறுக்கப்பட்ட எல்லையை மீறாதீர்கள். அதற்குள் இருங்கள். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இதனை கருத்தில் கொள்ள வேண்டும்.மேலும் கட்டுப்படுதலின் வட்டத்திற்கு இருக்க வேண்டும்**

**அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொள்ளுங்கள். நீங்கள் அல்லாஹ்வின் மீதும், எல்லா விதமான நன்மை தீமைகளின் இறை நியதியின் மீதும் நம்பிக்கை கொள்ளாத வரை உங்களால் இறையச்சத்தை மேற்கொள்ள முடியாது. இதுவன்றி வேறு ஏதாவதொரு விஷயத்தின் மீது நீ நம்பிக்கை கொண்டிருக்கும் பட்சத்தில் நீ மரணித்தால் பிறகு நீ நரகத்திற்கு செல்வாய் (ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்களின் இறுதி வஸிய்யத்)**

**கலப்பற்ற மற்றும் பற்றுணர்வில் தம்மையே மாய்யத்துக் கொண்ட மேலும் பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**அல்லாஹ் இந்த சஹாபாவின் அந்தஸ்தை உயர்த்துவானாக. இவர்கள் எத்தகைய விஷயங்களை நம் வரை எட்ட வைத்துள்ளார்கள் என்றால் அது நமது ஆன்மீக அறிவை வளர்த்துக் கொள்வது மட்டுமின்றி நமது செயல் ரீதியிலான வாழ்க்கையைக் கழிப்பதற்கும் மிக அவசியமாகும்**

**ஹுஸூர் அவர்கள் சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சயீது சவ்க்கியா சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய அத்தய்யிப் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மூத்த மகளான மதிப்பிற்குரிய அம்மத்துஷ் ஷுகூர் சாஹிபா அவர்களின் வஃபாத் தொடர்பான குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜுமுஆ மற்றும் அஸர் தொழுகையை ஜம்மு செய்து தொழுது பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 செப்டம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **06 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் அவர்களைப் பற்றி குறிப்பிட்டேன். அது முடிவடையவில்லை. அவரைப் பற்றி மேலும் சம்பவங்களையும் அறிவிப்புகளையும் கூறுகிறேன். வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. அப்துல்லாஹ் பின் உபைய் கூறியதற்கேற்ப அவரது நட்பு கோத்திரமான பனூ கைனுகா முஸ்லிம்களுடன் போர் தொடுத்தார்கள். உபாதாவும் அப்துல்லாஹ் பின் உபைய் போன்று நட்பு கோத்திரத்தார் ஆவார். ஆனால் போர் நிலைகளின் காரணமாக அந்த கோத்திரத்தை விட்டு பிரிந்து விட்டார். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுக்காக அவர்களின் நட்பிலிருந்து விலகி விட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

يٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوا الْيَهُوْدَ وَالنَّصٰرٰٓى أَوْلِيَآءَ بَعْضُهُمْ

أَوْلِيَآءُ بَعْضٍ وَمَنْ يَّتَوَلَّهُمْ مِّنْكُمْ فَإِنَّهُ مِنْهُمْ إِنَّ اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! யூத கிறித்தவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் நண்பர்களாவர். உங்களில் எவர் அவர்களுடன் நட்பு பாராட்டுவாரோ அவரும் அவர்களைச் சார்ந்தவர்களாவர். ஆனால் அல்லாஹ் அநீதியிழைக்கும் சமுதாயத்திற்கு நேர்வழி காட்ட மாட்டான். (5:52)

(அல் அஸாபா ஃபீ தமீஸூஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 506 உபாதா பின் சாமித் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறேன். இங்கு ஒருபோதும் எந்த கிறித்தவர் அல்லது யூதருக்கும் பயன்தரத்தக்க எந்தப் பணியும் செய்யக் கூடாது என்றும் தொடர்பு வைக்கக் கூடாது என்றும் பொருளல்ல. மாறாக, இதன் பொருள் ஒரு யூதர் அல்லது கிறித்தவர் யுத்த சூழலில் இருக்கும்போது நட்பு பாராட்டாதீர்கள்.

அது அல்லாமல் மற்ற இடத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான். அல்லாஹ் உங்களை நன்மை செய்வதை தடுக்கவில்லை. அவர்கள் உங்கள் மீது யுத்தம் செய்கிறார்கள். வீடுகளிலிருந்து வெளியேற்றியுள்ளார்கள் எனில் அல்லாஹ் மற்ற இடங்களில் கூறுகிறான்:

لَا يَنْهٰكُمُ اللّٰهُ عَنِ الَّذِيْنَ لَمْ يُقَاتِلُوْكُمْ فِى الدِّيْنِ

وَلَمْ يُخْرِجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ أَنْ تَبَرُّوْهُمْ وَتُقْسِطُوْٓا إِلَيْهِمْ إِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ

அவர்கள் மார்க்க விவகாரங்களில் உங்களைக் கொல்லுமாறும் உங்களை நாடற்றவராக்கவும் இல்லை எனில் அவர்களிடம் நீங்கள் நன்மை செய்யுங்கள். அவ்வாறு செய்வதிலிருந்து அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லை. அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியுடன் செயல்படுபவர்களை நேசிக்கின்றான். (60:8)

இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் கூறப்பட்டுள்ளது. நீங்கள் பலவீனம், பயம், கோழைத்தனம் காரணமாக முஸ்லிம் அல்லாதவர்களிடம் தொடர்பு வைக்க வேண்டாம். அதன் நோக்கம், உங்களுக்கு அல்லாஹ்வின் மீது தவக்குல் இருக்க வேண்டும் என்பதாகும். உங்கள் ஈமானிய நிலையில் முன்னேற்றம் இருந்தால் இறைவனும் உங்களுடன் இருப்பான்.

ஆனால் இன்று நாம் பார்க்கிறோம். துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் ஆட்சிகள் உதவி பெறுவதற்காக இந்த அந்நியர்களைச் சுற்றி வருகிறார்கள். அவர்களுக்கு அஞ்சவும் செய்கின்றனர். இதன் விளைவாக முஸ்லிம்கள் மற்ற முஸ்லிம்களுக்கு எதிராக அந்நியர்களிடம் உதவி கேட்பதால் பிறகு அவர்களே இஸ்லாத்தின் வேரை அறுப்பவர்களாகி விடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், இந்த முஸ்லிம் அரசுகளுக்கு அல்லாஹ் அறிவை வழங்க வேண்டும் என்று துஆ செய்கிறோம். இப்போது ஒரு சம்பவம் கூறப்பட்டு வந்தது. பனூ கைனுகா யுத்தம் செய்தார்கள். அவர்கள் தோற்றார்கள். சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் இதுபற்றி கூறப்பட்டுள்ளது. பனூ கைனுகா யுத்தத்தில் தோற்ற பிறகு அவர்களை நாடு கடத்தும் கட்டளையிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு ஆகும்.

பத்ர் போர் நடந்து முடிந்த பிறகு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அவர்களின் சிறுபான்மை மற்றும் பொருள் வசதியின்மை இருந்த நிலையிலும் குரைஷிகளின் பெரிய படையின் மீது வெற்றியை வழங்கினான். மக்காவின் பெரிய பெரிய ஆட்சி அதிகாரம் செய்தவர்கள் எல்லாம் மண்ணோடு மண் ஆயினர். மதீனாவின் யூதர்களின் மறைவான பொறாமை கொழுந்து விட்டு எரிந்தது. அவர்கள் முஸ்லிம்களுடன் வெளிப்படையாகவே சண்டையிடத் தொடங்கினர். சபைகளில் வெளிப்படையாகவே குரைஷி படைகளை வெல்வது என்ன பெரிய விஷயம்?

எங்களுடன் முஹம்மது (ஸல்) போட்டியிட்டால் எவ்வாறு சண்டையிட வேண்டும் என்று நாம் புரிய வைப்போம் என்று பேசினார். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகத்திற்கு நேராகவே இந்த வார்த்தைகளைக் கூறினர். இந்த வகையில் அறிவிப்பு வருகிறது. பத்ர் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்து ஒருநாள் யூதர்களை ஒன்றுகூட்டி போதனை செய்தார்கள். அதில் தமது வாதத்தை எடுத்து வைத்து இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள்.

அவர்களின் அமைதியான அனுதாபம் மிக்க சொற்பொழிவுக்கு யூதத் தலைவர்கள் இந்த வார்த்தையில் பதில் கூறினார்கள். முஹம்மதே! நீர் சில குரைஷிகளை கொன்று வெற்றி கொண்டு விட்டீர்கள். அவர்களோ போர்த்திறன் இல்லாதவர்கள். எங்களுடன் நீங்கள் சண்டையிட்டால் யுத்தம் செய்பவர்கள் எத்தகையவர்கள் என்று அறிந்து கொள்வீர்.

யூதர்கள் வெறும் வார்த்தையுடன் நிறுத்தவில்லை. எழுதப்பட்டுள்ளது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்ல திட்டமிட்டார்கள் என்று தெரிய வந்தது. ஏனெனில் அறிவிப்பில் வருகிறது. அன்னார்களில் தல்ஹா பின் பரா என்ற சஹாபி மரணத்தருவாயில் இறுதி அறிவுரை கூறினார்.

நான் இரவில் இறந்து விட்டால் ஜனாஸா தொழ வைப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டாம். என்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதும் விபத்து நடந்து விடக்கூடாது. அன்னார் இரவில் ஜனாஸாவுக்காக வந்தால் அவர்களுக்கு தாக்குதல் தொடுக்க வாய்ப்பு கிடைத்து விடலாம்.

எவ்வாறிருப்பினும் பத்ர் போருக்குப் பிறகு அவர்கள் வெளிப்படையாகவே விஷமத்தைத் தொடங்கி விட்டார்கள். மதீனாவின் எதிரிகள் பனூ கைனுகா மிகவும் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர். எனவே அவர்கள் தரப்பிலிருந்து உடன்படிக்கை மீறல் நிகழ்ந்தது.

இந்த வகையில் வரலாற்றாசிரியர்கள் எழுதுகிறார்கள்: மதீனாவின் யூதர்களுள் முதலில் பனூ கைனுகா தான் முதலில் அவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் உருவாகியிருந்த உடன்படிக்கையை முறித்தார்கள். பத்ர் போருக்குப் பிறகு அவர்கள் மிகவும் விஷமம் செய்யத் தொடங்கினர். வேண்டுமென்ற தமது காழ்ப்புணர்ச்சியையும் பொறாமையையும் வெளிக்காட்டினார்கள். தமது உடன்படிக்கையை மீறினார்கள். இவையெல்லாம் நடந்தும் தமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலுக்கேற்ப எல்லா வகையிலும் பொறுமையைக் கடைபித்தார்கள். தம் தரப்பிலிருந்து எந்த செயலும் செய்யவில்லை.

இன்னும் சொல்வதென்றால், ஹதீஸில் வருகிறது. யூதர்களுடன் நடந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக யூதர்களின் நலனை நாடினார்கள். ஒருமுறை ஒரு முஸ்லிமுக்கும் யூதருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. யூதர் மூஸா நபியை எல்லா நபிமார்களிலும் மேலானவர் என்று கூறினார். சஹாபிக்கு கோபம் வந்தது. அவர் யூதருடன் கடும் விவாதம் செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ரஸூல்மார்களில் சிறந்தவர் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவம் தெரிய வந்தது. அன்னார் கோபம் கொண்டார்கள். சஹாபியைக் கண்டித்தார்கள். எச்சரித்தார்கள். உமக்கு என்ன வேலை? நீர் ரஸூல்மார்களில் ஒருவரை விட ஒருவரை மேன்மைப்படுத்துகிறீர்? என்று கூறியவாறு முஸா (அலை) அவர்களுடைய ஒரு சிறப்பை விளக்கியவாறு யூதரின் மனதை சமாதானப்படுத்தினார்கள். இந்த ஆறுதல்படுத்தும் நடைமுறைக்குப் பிறகும் கூட மென்மை நடைமுறைக்கும், கனிவின் நடைமுறைக்குப் பிறகும் கூட யூதர்கள் தமது துவேசத்தில் முன்னேறினார்கள். இறுதியில் யூதர்களிடமிருந்தே யுத்தம் தொடங்கியது. அவர்களின் உள்ளத்து பகைமையை உள்ளத்தால் வைத்துக் கொண்டு இருக்க முடியவில்லை. வெளியில் வந்து விட்டது.

எவ்வாறு இது நடந்தது எனில் ஒரு முஸ்லிம் பெண் ஒரு யூதரின் கடையில் பொருள் வாங்கச் சென்றார். சில விஷமிகளான யூதர்கள் கடையில் அமர்ந்திருந்தார்கள். மிகவும் மோசமான முறையில் அப்பெண்ணை சீண்டினார்கள். கடைக்காரரும் கூட அப்பெண்ணின் கீழாடையை முள்ளால் அல்லது ஊக்கு போன்ற ஒன்றை குத்தி அப்பெண் அறியாத முறையில் கிழித்து விட்டார். விளைவு அப்பெண் அவர்களின் தீய நடைமுறையைப் பார்த்து திரும்பி வரும்போது நிர்வாணமானார். ஆடை கழன்று விட்டது. அந்த யூதக் கடைக்காரும் யூதர்களும் சிரித்தனர். எள்ளி நகையாடினர். முஸ்லிம் பெண் ஞானத்தால் கூக்குரலிட்டார். உதவிக்கு அழைத்தார்.

இந்நிலையில் ஒரு முஸ்லிம் அந்த இடத்தின் அருகில் இருந்ததால் அங்கு வந்து சேர்ந்தார். அவர்களுடன் சண்டை தொடங்கியது. யூதக் கடைக்காரர் கொல்லப்பட்டார். முஸ்லிம்களை நோக்கி நாலாபுறமும் வாள்கள் நீட்டப்பட்டன. அவர்கள் அந்த முஸ்லிமை அங்கேயே கொன்று விட்டனர். முஸ்லிம்களுக்கு இந்த சம்பவம் பற்றி தெரிய வந்ததும் அவர்களுக்கு ஒரு ரோஷம் எழுந்தது. அவர்களின் கண்களில் இரத்தம் வழிந்தது. மறுபுறம் யூதர்கள் இந்த சம்பவத்தை சாக்காக வைத்து சண்டையிட விரும்பினர். கூட்டமாகக் கூடினர். குழப்பமான நிலை ஏற்பட்டது.

இதுபற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்ததும் அன்னார் பனூ கைனுகாவின் தலைவர்களை அழைத்து, இம்முறை சரியல்ல. நீங்கள் இந்த விஷமத்திலிருந்து விலகுங்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள் என்றார்கள். அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டு தமது வெட்கத்தை வெளிப்படுத்துவதற்குப் பதில் மன்னிப்புக் கேட்பதற்குப் பதில் அவர்கள் மிகவும் கர்வத்துடன் பெருமையுடன் பதில் கூறினர். மிரட்டலைத் தொடர்ந்தனர். பத்ரின் வெற்றியில் மூழ்கி விட வேண்டாம். எங்களுடன் சண்டையிட்டால் சண்டை செய்பவர் எப்படியிருப்பார் என்று தெரிய வரும் என்றனர். சஹாபாக்களை அழைத்துக் கொண்டு பனூ கைனுகாவின் கோட்டைக்குச் சென்றார்கள். இவர்களுக்கு இது கடைசி வாய்ப்பாக

இருந்தது. அவர்கள் திருந்தி இருக்கலாம். அவர்கள் வரம்பு மீறி இருந்தனர். அதற்காக வருந்தியிருக்கலாம். சமாதானத்தின் பக்கம் அடியெடுத்து வைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் முன்னாலேயே சண்டைக்கு தயாராயினர். எவ்வாறிருப்பினும் சண்டைக்கான அறிவிப்பு வந்தது. இஸ்லாம் மற்றும் யூத சக்திகள் ஒருவர் மற்றவருக்கு எதிரில் நின்றனர்.

அக்கால நடைமுறைக்கேற்ப சண்டையின் ஒரு நடைமுறை இவ்வாறும் இருந்தது. அவர்கள் தமது கோட்டைகளில் பாதுகாப்பாக அமர்ந்து கொள்வர். எதிர் தரப்பு முற்றுகையிடுவர். பேச்சு முற்றி ஒருவர் மற்றவருடன் தாக்குதல் ஆரம்பமாகும். எந்த அளவுக்கு என்றால், முற்றுகையிடும் படை கோட்டையைக் கைப்பற்றுவதில் விரக்தி அடைந்து முற்றுகையை நிறுத்துவர். பிறகு கோட்டைக்குள் இருக்கும் மக்கள் வெற்றி பெற்றதாகக் கருதப்படுவர். அல்லது இவ்வாறும் நடக்கும். கோட்டைக்குள் இருப்பவர்கள் கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு தம்மை வெற்றி பெற்றவர்களிடம் ஒப்படைத்து விடுவர்.

இந்த போரிலும் ஒரு கோட்டையில் அமர்ந்து கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோட்டையைச் சுற்றிக் கொண்டு அவர்களை முற்றுகையிட்டார்கள். முற்றுகை 15 நாட்கள் வரை நீடித்தது. இறுதியில் பனூ கைனுகாவின் எல்லா ஆயுதங்களும் முறிந்தன. அவர்கள் ஒரு நிபந்தனையுடன் தமது கோட்டையத் திறந்தனர். அவர்களின் பொருட்களை முஸ்லிம்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களின் உயிர்கள் குடும்பங்களின் மீது முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்ற நிபந்தனையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த சூழ்நிலையில் முஸ்லிம்களின் ஷரீஅத்தின்படி அவர்கள் கொல்லப்பட்ட தகுந்தவர்கள் ஆவர். அவர்களுக்கு உடன்படிக்கையின்படி மூஸாவின் ஷரீஅத் தான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த சமுதாயத்தின் முதல் குற்றமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நிகரற்ற அன்பும் சிறப்பும் தண்டனை என்ற கடைசி சிகிச்சையை ஆரம்பக் குற்றத்திற்கு தர இயலாது என்றும் கருதியது.

மறுபுறம் அத்தகையை உடன்படிக்கையை மீறக் கூடிய பகைமை சமுதாயத்தைத மதீனாவில் வாழ விடுவது கொல்லத்தக்க பாம்பை வைத்து பராமரிப்பது போன்ற செயலாகும். ஏற்கனவே அவ்ஸ் கஸ்ரஜ் என்ற நயவஞ்சகக் கோத்திரங்கள் முதலிலேயே மதீனாவில் இருந்தன. வெளியிலும் எல்லா அரபு கோத்திரங்களும் முஸ்லிம்களைக் குறித்து மூக்கில் கோர்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தீர்ப்பு பனூ கைனுகா மதீனாவை விட்டு சென்று விட வேண்டும் என்பது அவர்களின் குற்றத்திற்கு எதிரில் அக்கால சூழலைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது மிகவும் மென்மையான தண்டனையாகும். உண்மையில் இதன் நோக்கம் தம்மைப் பாதுகாப்பதேயாகும். மதீனாவின் முஸ்லிம்களைப் பாதுகாப்பதுதான் நோக்கமாகும்.

அது அல்லாமல் அரபுகளின் நாடோடிகள் குறித்து மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: அவர்களின் பார்வையில் ஊரை விட்டுப் போவது ஒரு பெரிய விஷயமே அல்ல. அவர்களே சுற்றிக் கொண்டு திரிவார்கள். ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு இடம் பெயர்ந்து கொண்டேதான் இருப்பார்கள். குறிப்பாக ஒரு கோத்திரத்திற்கு சொத்துக்களோ நிலங்களோ தோப்புகளோ இல்லை என்றால் பனூ கைனுகா போன்று இருந்தால் அவர்களிடமும் அவை இருக்கவில்லை. அம்மக்கள் அந்தக் கோத்திரம் முழுக்க முழுக்க நிம்மதியாக ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்கு சென்று வசிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வகையில் பனூ கைனுகா மிகவும் நிம்மதியுடன் மதீனாவை விட்டு சிரியாவுக்குச் சென்று விட்டார்கள். அவர்கள் செய்வது குறித்து ஏற்பாடும் கண்காணிப்பும் செய்யும் பணியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபி உபாதா பின் ஸாமித் இடம் வழங்கியிருந்தார்கள். அவரைப் பற்றியே இப்போது கூறி வருகிறோம்.

உபாதா பின் ஸாமித் அவர்களின் நட்புக் கோத்திரமாக இருந்ததால் சிறிது தூரம் பனூ கைனுகாவுடன் சென்றார்கள். பிறகு அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தார்கள். தாம் திரும்பி வந்தார்கள். போர் செல்வமாக முஸ்லிம்களுக்கு யுத்தக் கருவிகள் மட்டுமே கிடைத்தன. அல்லது அவர்களின் தொழிலாக இருந்த சில கருவிகளைத் தவிர போர்ச் செல்வமாக முஸ்லிம்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 458–460)


இது பற்றி சீரத்துல் ஹல்பிய்யாவில் சிறிது விபரங்கள் உள்ளன. அதில் எழுதப்பட்டுள்ளது. அந்த யூதர்கள் மதீனாவை விட்டு நிரந்தரமாக நாடு கடத்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவர்களை நாடு கடத்தும் பொறுப்பை ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். யூதர்கள் மதீனாவை விட்டு வெளியேற மூன்று நாள் அவகாசம் கேட்டனர். இந்த வகையில் யூதர்கள் மூன்று நாள்களுக்குப் பிறகு மதீனாவை விட்டு விடை பெற்றுச் சென்றனர்.

அதற்கு முன் யூதர்கள் உபாதா பின் ஸாமிதிடம் மூன்று நாள்கள்தான் அவகாசம் தரப்பட்டுள்ளது. இன்னும் சிறிது அவகாசம் வேண்டும் என்ற கோரிக்கை வைத்தனர். ஆனால் ஹஸ்ரத் உபாதா, இல்லை. ஒரு நிமிடம் கூட அவகாசத்தை அதிகரிக்க இயலாது என்று கூறினார்கள். பிறகு உபாதா தமது கண்காணிப்புடன் அவர்களை நாடு கடத்தினார். அவர்கள் சிரியா நாட்டிற்குச் சென்று அங்குள்ள ஓர் ஊரில் ஒரு மைதானத்தில் தங்கினார்கள்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 287 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் இடமிருந்து வேறு நிறைய ஹதீஸ்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அன்னாரின் அறிவிப்புகளில் ஒன்று கிடைக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பணிகள் அதிகமாக இருந்தன. எனவே முஹாஜிரீன்களில் ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவருக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்க எங்களில் ஒருவரிடம் அவரை ஒப்படைப்பார்கள். இவரை அழைத்துச் சென்று திருக்குர்ஆன் கற்றுக் கொடுங்கள். மார்க்கப் போதனைகளை கற்றுக் கொடுங்கள் என்று கூறுவார்கள்.

அவர் கூறுகிறார்: ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரை என்னிடம் ஒப்படைத்தார்கள். அவர்



என்னுடன் வசித்து வந்தார். அவரையும் எனது வீட்டினருடன் உணவில் சேர்த்துக் கொண்டேன். அவருக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தேன். அவர் தமது குடும்பத்தாரிடம் செல்லும்போது தம் மீது எனக்கு உரிமை இருப்பதாகக் கருதினார். அதாவது தங்கியிருந்தாலும் நான் சேவை செய்ததாலும் குர்ஆன் கற்றுக் கொடுத்தாலும் எனக்கு உரிமை இருப்பதாகக் கருதினார்.

அதற்காக வில் ஒன்றை பரிசாக வழங்கினார். அம்புகளை வைக்கும் அந்த வில்லை வழங்கியவாறு இது எத்தகைய சாதனம் என்றால் இதனை விட சிறந்த மரத்தையும் இதனை விட மிருதுவானதையும் நாம் பார்த்ததில்லை என்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களின் சமூகத்திற்கு வந்திருந்தார். அன்னாரிடம் அவரைப் பற்றி கேட்டேன். அவர் எனக்கு இவ்வாறு வில் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

அன்னார் கூறினார்கள்: இது உமது தோள்களின் நடுவில் ஒரு வில் ஆகும். நீர் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்ததற்காக இது உமக்கு தரப்பட்டுள்ளது. உமது தோள்களில் தொங்குகிறது என்றார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 563 முஸ்னது உபாதா பின் சாமித் ஹதீஸ் எண் 23146 – 1998–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இன்னோர் அறிவிப்பும் உள்ளது. ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் அறிவிக்கிறார்கள். நான் அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா திண்ணைத் தோழர்களில் இருந்து திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தேன். எழுதவும் கற்றுக் கொடுத்தேன். அப்போது அதில் ஒருவர் எனக்கு அன்பளிப்பாக அம்புகள் வைத்திருக்கும் வில்லை அனுப்பினார். இது ஒன்றும் செல்வம் இல்லையே?

இது பணம் அல்ல. தங்கம், வெள்ளியும் அல்ல. அல்லது வேறு கரன்சியும் இல்லை. இதிலிருந்து நான் அல்லாஹ்வின் வழியில் அம்பு விடுவேன் என்றும், இந்த வில்தான் பயன்தரக்கூடியது என்றும், எனக்கு எப்போது ஜிஹாது செய்யும் வாய்ப்பு வந்தாலும் அம்பு விட பயன்படும் என்றும், அல்லாஹ்வின் வழியில் பயன்படுத்த வேண்டும் என்றும் எண்ணினேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இதுபற்றி கேட்ட போது, அன்னார் கூறினார்கள்: நீர் நெருப்பு நாண் அணிவதை விரும்பினால் இதை ஏற்றுக் கொள். அதாவது நீர் விரும்பினால் நெருப்பின் ஒரு நாண் உமது கழுத்தில் அணிவிக்கப்பட்டால் நல்லது. ஏற்றுக் கொள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் திஜாராத்... ஹதீஸ் எண் 2157)

விரிவுரையாளர்கள் இந்த அறிவிப்பில் ஒத்த இரு அறிவிப்புகளை பல்வேறு இடங்களில் ஆதாரம் காட்டி விளக்கியுள்ளார்கள். திருக்குர்ஆன் கற்பித்ததற்கு ஓதிக் கொடுத்ததற்க கூலியாக அந்த வில் கிடைத்தது. அதனை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. ஆகவே தனிப்பட்ட முறையில் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதை வருமானத்தின் வழியாக ஆக்கியவர்களுக்கு இதில் வழிகாட்டல் உள்ளது.

ஹஸ்ரத் ராஷித் பின் ஹுபைஷ் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் அவர்களை நலம் விசாரிக்க அவர்களிடம் வந்தார்கள். அப்போது அவர் நோயுற்றிருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எனது உம்மத்தில் யார் யாரெல்லாம் ஷஹீதுகள் என்று உமக்கு தெரியுமா? உடனே ஒருவர் மற்றவரைப் பார்த்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உபாதா பின் ஸாமித் அவர்களை நலம் விசாரிக்க வந்தார்கள்.

அங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் யார் யாரெல்லாம் ஷஹீதுகள் என்று உமக்கு தெரியுமா? ஒருவர் மற்றவரைப் பார்த்தனர். ஹஸ்ரத் உபாதா அம்மக்களிடம் கூறினார். என்னை சாய்த்து வைத்து பிடித்துக் கொள்ளுங்கள். அவ்வகையில் பிடித்து அமர்த்தப்பட்டதும் ஹஸ்ரத் உபாதா கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! யார் யார் ஷஹீது என்று தெரியுமா? என்று கேட்டீர்கள். தைரியத்துடன் உறுதியான பாதத்துடன் போராடுபவர், நற்கூலியின் நிய்யத் கொண்டவர் ஷஹீது ஆவார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவ்வளவு தான் எனில் எனது உம்மத்தில் ஷஹீதுகள் மிகவும் குறைவாகவே இருப்பர்.

பிறகு அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுதல் ஷஹீது ஆகும். பிளேக்கினால் மரிப்பது ஷஹாதத் ஆகும். அது பரவியிருக்கும் வேளையில் ஒரு நம்பிக்கையாளர் ஏதாவது காரணத்தால் அதனால் பொதிந்து கொள்ளப்பட்டால் அவர் நல்ல நம்பிக்கையாளர் எனில் அது அவருக்கு ஷஹாதத் ஆகும். பிறகு நீரில் மூழ்குதல் ஷஹாதத் ஆகும். வயிற்று வலியால் மரிப்பது ஷஹாதத் ஆகும். பெருந் தொடக்கின் வேளையில் பெருந் தொடக்கில் மரணிப்பவளை அவளது குழந்தை தமது கையால் இழுத்துக் கொண்டு சென்று அவளை ஜன்னத்தில் சேர்க்கும்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 492 – 1998–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அதாவது அந்தப் பெண் குழந்தை பிறப்பின்போது அதிக இரத்தப் போக்கினால் மரித்து விட்டால் அல்லது பெருந்தொடக்கின் நிலையில் 40 நாட்களில் பலவீனத்தின் காரணமாக மரணித்தால், குழந்தை பிறப்பினால் அந்நிலையின் பலவீனம் என்றும், அந்தக் குழந்தை இழுத்துக் கொண்டு சென்று அப்பெண்ணை ஜன்னத்திற்கு எடுத்துச் செல்லும். அதாவது அக்குழந்தை அப்பெண்ணுக்கு சொர்க்கம் கிடைக்கக் காரணமாகி விடும்.

சஹீஹ் புகாரியில் ஒரு ஹதீஸ் உள்ளது. நான் விளக்கியும் உள்ளேன். அதை ஒத்த அறிவிப்பு இதுவும் ஆகும். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஷஹீது ஐவர். பிளேக்கினால் மரணிக்கக் கூடியவர், நோயினால் மரணிக்கக்கூடியவர், (தண்ணீரில்) மூழ்கி மரணிப்பவர், நசுங்கி மரணிப்பவர், அல்லாஹ் வழியில் ஷஹீதானவர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாது.... ஹதீஸ் எண் 2829)

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! நீ இறக்கியதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் இத்தூதரைப் பின்பற்றுகிறோம். எனவே நீ எங்களைச் சாட்சியாளர்களுடன் பதிவு செய்வாயாக. (3:54)

A.Nasir Ahmad

அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பிளேக் நோய் ஒரு அடையாளமாக கூறப்பட்டுள்ளது. இப்போது அன்னாருக்கு ஓர் அடையாளம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் உண்மையான ஈமான் கொண்டவர்கள் மீது இது தாக்காது என்பதாகும். எனவே இங்கு முற்றிலும் வேறொரு சூழ்நிலை ஆகி விட்டது. ஆனால் பொதுவாக ஒரு தொற்றுநோய் பரவியிருந்து அதில் ஒரு நம்பிக்கையாளர், முழுமையான நம்பிக்கையாளர் அதனால் மரணித்தால் அவர் ஷஹீது என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இஸ்மாயீல் பின் உபைத் அன்ஸாரி கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உபாதா, ஹஸ்ரத் அபூஹுரைராவிடம் கூறினார்கள். அபூஹுரைராவே! நீர் எங்களுடன் இல்லாதபோது மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்யும் போது நாங்கள் அன்னாரிடம் சுறுசுறுப்பு சோம்பல் எந்நிலையிலும் கேட்கவும், ஏற்கவும், நல்ல நிலையிலும் வறுமையிலும் செலவு செய்யவும் நன்மையை ஏவி தீயதை விலக்குவதில் அல்லாஹ்வாகிய அருளுக்கும் மேன்மைக்கும் உரியவன் பற்றி சரியான விஷயத்தைக் கூறுவதும், அவ்விஷயத்தில் எந்தப் பழி கூறுபவரின் பழிச்சொல்லுக்கும் அஞ்சாமலும் பொருட்படுத்தாமலும் ஒளி பொருந்திய மதீனாவுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரும்போது அவர்களுக்கு உதவி செய்வதாகவும், எமது உயிர் மற்றும் மனைவி மக்களை விட அன்னாரைப் பாதுகாக்கவும் செய்வோம் என்றும் பைஅத் செய்தோம். இவை அனைத்து விஷயத்திலும் பைஅத் செய்தோம். இதற்காக எங்களுக்கு ஜன்னத் வாக்களிக்கப்பட்டது.

ஆகவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நாங்கள் எதன் மீது பைஅத் செய்தோமோ அதனை முறிப்பது நமக்கு நஷ்டம் விளைவிப்பதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எந்த நிபந்தனையின்படி பைஅத் செய்தோமோ அதனை நிறைவேற்றினால் அல்லாஹ் அந்த பைஅத்திற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் வாக்குறுதியை முழுமை செய்வான்.

ஒருமுறை ஹஸ்ரத் முஆவியா ஹஸ்ரத் உஸ்மான் கனி அவர்களுக்கு கடிதம் எழுதினார். ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் அவர்களால் சிரியாவாசிகள் எனக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறார்கள். நீங்கள் உபாதாவை திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள் அல்லது நான் அவரை விட்டும் சிரியாவை விட்டும் விலகிக் கொள்கிறேன். அதாவது இங்கிருந்து நான் சென்று விடுகிறேன்.

ஹஸ்ரத் உபாதாவை வாகனத்தில் அமர்த்தி ஒளி பொருந்திய மதீனாவில் அவரது வீடு வரை கொண்டு வந்து விட ஏற்பாடு செய்யுங்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் எழுதினார்கள்.

இந்த வகையில் ஹஸ்ரத் முஆவியா அன்னாரை அனுப்பி வைத்தார்கள். அன்னார் மதீனா முனவ்வரா வந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் தமது வீட்டிற்குச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் உபாதா தனிநபராக இருந்தார். முன்னே பின்னே யாரும் இருக்கவில்லை. எந்த சஹாபாக்களும் இல்லாத நிலையில் ஹஸ்ரத் உஸ்மான் உடைய வீட்டில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்.

பிறகு அவர் பக்கம் திரும்பி ஹஸ்ரத் உஸ்மான் கூறினார்: உபாதா பின் ஸாமித் உமக்கும் எங்களுக்கும் என்ன விவகாரம்? என்றதும் ஹஸ்ரத் உபாதா மக்கள் முன் வந்து, நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். எனக்குப் பிறகு சில ஆட்சியாளர் வருவர். நீர் விரும்பாத செயல்களைச் செய்பவர்களாக அவர்களை காண்பீர். அவர்கள் வெறுக்கின்ற செயல்களை நீர் நல்லதாகக் கருதுவீர். எனவே எவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்படமாட்டாரோ அவருக்கு கட்டுப்படாதே. எனவே நீர் ரப் உடைய கட்டளைகளை அலட்சியம் செய்யாதே என்று கூறக் கேட்டேன்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 564,565 முஸ்னது உபாதா பின் சாமித் ஹதீஸ் எண் 23149, 23150 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

சில விவகாரங்கள் முரண்படலாம். அவற்றில் அமீர் முஆவியா மற்றும் உபாதா பின் ஸாமித் இருவருக்கும் இடையிலுள்ள பிரச்சனைகளும் அடங்கும். கடந்த குத்பாவிலும் கூட கூறினேன். ஹஸ்ரத் உமர் (ரலி) காலத்தில் இதுபோன்ற சம்பவம் நடந்தது. ஏனெனில் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் ஆரம்பகால சஹாபாக்களைச் சார்ந்தவராவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக கேட்ட விஷயங்களில் அன்னார் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுபவர்களாக இருந்தார்கள். செயல்பட வைப்பவர்களாகவும் இருந்தார்கள். இதுவே சரி என்று கூறுபவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது காலத்தில் இவ்வாறு நடந்தபோது, அமீர் முஆவியாவுடன் அன்னாருக்கு கருத்து மோதல் ஏற்பட்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஆவியாவிடம், அவரிடம் உமக்கு எந்த பேச்சுவார்த்தையும் வேண்டாம் என்றும் என்ன விவகாரங்களை உபாதா கூறுகிறாரோ அதனை அவரைச் செய்ய விடுங்கள் என்றும் எழுதி விட்டார்கள். அன்னார் மதீனா வந்ததும் திரும்ப அனுப்பி வைத்தார்கள்.

(சுனன் இப்னு மாஜா... ஹதீஸ் எண் 18)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) காலத்தில் மீண்டும் பிரச்சனை வந்தபோது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), அவரை அன்னாரின் சூழலுக்கேற்ப திரும்ப அழைத்துக் கொண்டார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உபாதாவுக்கு ஓர் அந்தஸ்து இருந்தது. சில விபரங்களை விரிவாக விளக்க முடிந்தவர்களாக இருந்தார்கள். சில விஷயங்களில் தெளிவாகவே கூறியும் வந்தார்கள். உதாரணமாக கொடுக்கல் வாங்கல் விவகாரம், எல்லைப் பிரச்சனைகள், வணிக விவகாரங்கள். இது ஒரு பரந்த கருத்தாகும். இப்போது விளக்க முடியாது. இவற்றில் அமீர் முஆவியாவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. காரணம் அவர்களிடம் ஆதாரம் இருந்தது. அதற்கேற்ப அன்னார் விளக்கம் கொடுத்தார்கள்.

அமீர் முஆவியா தாம் ஒரு விளக்கம் கொடுத்தார். தெளிவான ஆதாரம் இல்லாதவரை திருக்குர்ஆன், ஹதீஸ், இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விளக்கங்கள் இல்லாமல் கருத்து வேறுபாடு கொண்டு திரிவது சரியல்ல. அடிப்படையான அவசியமான விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ்வுடைய வரம்புகளை மீறக்கூடாது.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு இத்தூதர் உண்மையாளர் என்று சாட்சியமும் கூறி அவர்களிடம் தெளிவான சான்றுகள் வந்த பின்னரும் நிராகரிப்போரை அல்லாஹ் எவ்வாறு நேர்வழியில் நடத்துவான்? அல்லாஹ்(வோ) அநீதியிழைப்போருக்கு நேர்வழி காட்டுவதில்லை. (3:87)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

வரம்பின்கீழ் நிற்க வேண்டும். இதனை ஒவ்வோர் அஹ்மதியும் கருத்தில் கொள்ள வேண்டும். கட்டுப்படுதலின் வட்டத்தில் நிற்க வேண்டும்.

அதாயா அறிவிக்கிறார்கள்: நான் வலீதை சந்தித்தேன். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபியான உபாதா பின் ஸாமிதின் மகன் ஆவார். அவரிடம் நான், உங்கள் தந்தை ஹஸ்ரத் உபாதா மரண வேளையில் என்ன வஸியிய்யத் செய்தார்? என்று கேட்டேன். அதற்கு அவர், ஹஸ்ரத் உபாதா என்னை அழைத்து, எனது மகனே! அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள். அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்ளாமல் எல்லா வகையான நன்மை தீமை குறித்த இறை நியதி மீது கொள்ளாமல் ஒருபோதும் இறையச்சம் கிடைக்க முடியாது. எனவே இது அல்லாத எந்த கொள்கை மீது மரணித்தாலும் நரகில் நுழைவாய் என்று கூறினார்.

(சுனன் திர்மிதி... ஹதீஸ் எண் 2155)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உம்மே ஹரம் பின்த் மல்ஹான் வீட்டிற்குச் செல்வார்கள். இவர் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் உடைய மனைவி ஆவார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் உம்மே ஹராம் வீட்டிற்குச் சென்றபோது, அவர் அன்னாருக்கு உணவளித்தார். அன்னாரின் தலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உறங்கி விட்டார்கள்.

அவ்வாறு உறங்கிய நிலையில் புன்முறுவல் செய்தவாறு எழுந்தார்கள். ஹஸ்ரத் உம்மே ஹராம், அல்லாஹ்வின் தூதரே! எதற்காக சிரித்தீர்கள்? என்று கேட்டார். அன்னார், எனது உம்மத்திலுள்ள சில மக்கள் எனக்கு காட்டப்பட்டார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் யுத்தம் செய்ய புறப்பட்டவர்கள். அரியணையில் அமர்வது போன்று அமர்ந்திருக்கிறார்கள் என்றோ அல்லது அரசர்கள் அரியணையில் அமர்வது போன்று அமர்ந்திருந்தார்கள் என்றோ கூறினார்கள். விளக்குபவர் சந்தேகத்துடன் கூறினார். எந்த வார்த்தை கூறினார்கள்?

எவ்வாறிருப்பினும், நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதரே! துஆ செய்யுங்கள். அவன் என்னையும் அவர்களுடன் சேர்ப்பானாக. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உம்மே ஹராமுக்காக துஆ செய்தார்கள். பிறகு அன்னார் தமது தலையை வைத்து உறங்கி விட்டார்கள். பிறகு சிரித்தவாறு எழுந்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! ஏன் சிரித்தீர்கள் என்று நான் கேட்டேன். என் உம்மத்தில் சில மக்கள் என் முன் காட்டப்பட்டனர். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் யுத்தம் செய்ய புறப்பட்டவர்கள்.

பிறகு முதலில் நடந்த அனைத்து விஷயங்களையும் கூறினார்கள். உடனே நான் யாரஸூலல்லாஹ்! என்னையும் அதில் சேருங்கள் என்றதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் முதலிலேயே அதில் இணைந்து விட்டீர்கள் என்று கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் உம்மே ஹராம் முஆவியா பின் அபுஅப்யான் காலத்தில் கடலில் பயணம் செய்தார். கடலை விட்டு வெளியில் வந்ததும் தமது வாகனத்திலிருந்து விழுந்து மரணம் அடைந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாது.... ஹதீஸ் எண் 2788,2789)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உம்மே ஹராம் வீட்டிற்குச் செல்வார்கள். காரணம் மஹரமான புனித ஹாலில் உள்ளவர் ஆவார். அன்னாரின் மனைவி அல்ல. எவ்வாறு சென்றார்கள்? என்பது குறித்து எழுதப்பட்டுள்ளது. உம்மே ஹராம் மல்ஹான் இப்னு காலித் உடைய மகள் ஆவார். பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். அனஸ் உடைய சிற்றன்னை. அனஸ் உடைய தாயார் உம்மே சுலைம் உடைய சகோதரி ஆவார். உம்மே ஹரம் மற்றும் உம்மே சுலைம் ஆகிய இரு சகோதரிகளும் பால்குடி உறவு அல்லது நெருங்கிய உறவு முறையால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சிற்றன்னை ஆவார்.

(அல் இஸ்திஆப் தொகுதி 4 பக்கம் 1931 – 1992–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சடிக்கப்பட்டது)

இமாம் நவ்வி எழுதுகிறார்: எல்லா அறிஞர்களின் ஒன்றுபட்ட கருத்தின்படி உம்மே ஹராம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மஹரமான உறவு ஆவார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த சங்கோஜமும் இன்றி மதிய வேளையில் சில வேகைளில் உம்மே ஹராம் வீட்டில் ஓய்வு எடுப்பார்கள். ஆனால் எந்த வகையில் புனித உறவு என்பதில் கருத்து வேறுபாடு உள்ளதே தவிர மஹரம்தான் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். எந்த உறவின்படி மஹரம் ஆக இருந்தார்கள் என்பதில் சிலர் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.

எவ்வாறிப்பினும், சிலர் சில தொடர்புகளைக் காட்டி மஹரம் என்றால் சிலர் ஒரு தொடர்பின் மூலம் மஹரம் என்கின்றனர். ஹஸ்ரத் உம்மே ஹராம் இஸ்லாத்தை ஏற்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கையில் பைஅத் செய்தார். அவரது கணவர் உபாதா பின் ஸாமித் ஆகிய அன்னாரின் ஒரு கம்பீரமிக்க சஹாபியுடன் வந்து இஸ்லாத்தை ஏற்றார்.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தார். ஹஸ்ரத் உஸ்மான் ஸுன்னூனான் கிலாஃபத் காலத்தில் அன்னாரது கணவரான உபாதா பின் ஸாமித் என்ற கம்பீரமிக்க அன்ஸாரி அல்லாஹ்வின் வழியில் ஜிஹாதிற்காக வெளிப்பட்டார். ரோம் உடைய தலைநகர் சென்று அங்கு ஷஹாதத்தைப் பெற்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கனவில் கண்டபடியே ஷஹாதத்தைப் பெற்றார்.

புகாரியின் விரிவுரையான உம்ததுல் காரி மற்றும் புகாரியின் இன்னொரு விரிவுரையான இஷாஅத்துஸ் ஸாரியில் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உம்மே ஹராம் ஹிஜ்ரி 27 – 28 –ல் வஃபாத் ஆனார். சிலரது பார்வையில் அவரது வஃபாத் அமீர் முஆவியா உடைய ஆட்சிக் காலத்தில் நடந்தது. முதல் கூற்று அதிக பிரபல்யமானது. வரலாற்றை எழுதுபவர்கள் இதனைக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் உஸ்மான் உடைய கிலாஃபத் காலத்தில் இந்த கடல் சண்டை நடந்தது. அதில் உம்மே ஹராமின் மரணம் நிகழ்ந்தது. முஆவியா காலம் என்பதன் பொருள் முஆவியாவின் ஆட்சிக் காலம் அல்ல.

மாறாக அதன் பொருள், முஆவியா ரோமுக்கு எதிராக கடற்சண்டை நிகழத்திய காலமாகும். இந்த சண்டையில் ஹஸ்ரத் உம்மே ஹராமின் கணவர் உபாதா பின் ஸாமித் கலந்து கொண்டார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிராகரித்து, நிராகரித்தவர்களாகவே மரணமடைகிறவர்களுள் எவனும், பூமியளவு பொன்னை ஈடாகக் கொடுத்தாலும், அவனிடமிருந்து ஒருபோதும் ஏற்கப்பட மாட்டாது. அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை (விதிக்கப்பட்டு) உள்ளது. அவர்களுக்கு உதவி செய்பவன் எவனும் இல்லை. (3:92)

Faizal Hameed Ilahi (Tittacherry)

அந்த கடல் சண்டையில் இருந்து திரும்பும்போது ஹஸ்ரத் உம்மே ஹராம் மரணமடைந்தார். அது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலமாகும்.

(அமதத்துல் காரி ஷரஹ் சஹீஹுல் புகாரி தொகுதி 14 பக்கம் 128 – 2003–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஹுல் அரபிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஜனாத்தா பின் அபூ உமைய்யா அறிவிக்கிறார்: நாங்கள் உபாதாவிடம் சென்றபோது அவர் நோயுற்றிருந்தார். நாங்கள் கூறினோம். அல்லாஹ் உங்களுக்கு உடல்நலம் தருவானாக. நீங்கள் ஏதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட ஹதீஸைக் கூறுங்கள். உங்களுக்கு நன்மை கிடைக்கட்டும்.

அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை அழைத்தார்கள். நாங்கள் பைஅத் செய்தோம். என்ன விஷயத்தில் நாங்கள் அன்னாரிடம் பைஅத் செய்தோமோ அவை, எங்கள் சுகம், துக்கம், வறுமை, வளமை போன்றவை எங்களிடம் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையிலும், கேட்டோம்; கட்டுப்படுவோம். அதிகாரம் பெறுவதற்காக ஆட்சியாளரிடம் சண்டையிட மாட்டோம். வெளிப்படையாக மறுப்பு செய்து அம்மறுப்புக்கு அல்லாஹ்விடமிருந்து ஆதாரமும் இருக்கும் நிலையில் மட்டுமே சண்டேயிடுவோம்.

(சஹீஹுல் முஸ்லிம் கிதாபுல் ஃபித்ன்.... ஹதீஸ் எண் 7055,7056)

சனபீ அறிவிக்கிறார்: ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் அவர்களை மரணம் நெருங்கியபோது அருகில் சென்றோம். நான் அழுததும் அவர் நில்லுங்கள். ஏன் அழுகிறீர்கள்? இறைவன் மீது ஆணையாக என்னிடம் சாட்சி கோரப்பட்டால் உமக்காக சாட்சி கூறுவேன். எனக்கு பரிந்துரை செய்ய உரிமை தரப்பட்டால் உமக்காக பரிந்துரை செய்வேன். எனக்கு சக்தி இருந்தால் உமக்கு பயன்படுவேன்.

மேலும் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கேட்ட ஒவ்வொரு ஹதீஸிலும் உமது நன்மையே இருந்தது. அதனை உமக்கு முன் எடுத்து வைத்து விட்டேன். ஒன்றைத் தவிர. அதனை இப்போது கூறுவேன். நான் மரணத்தின் மடியில் இருக்கிறேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். எவர் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ரஸூல் என்றும் சாட்சி கூறினாரோ அவர் மீது நெருப்பு ஹராம் ஆகி விடும். அவர் முஸ்லிம் ஆவார் என்பதே அந்த ஹதீஸ்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஈமான்.... ஹதீஸ் எண் 29)

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்கள் நமக்கு எத்தகைய விஷயங்களைக் கொண்டு சேர்த்தார்களோ அது நமக்கு அறிவு மட்டுமின்றி ஆன்மீக அறிவு மட்டுமின்றி செயல்ரீதியான வாழ்வுக்கும் அவசியமாகும்.

இப்போது சில மர்ஹூமீன்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர்களின் ஜனாஸா தொழ வைப்பேன். முதலாவது சமீது சங்கியா சாஹிப். சிரியாவைச் சேர்ந்தவர். 18 ஏப்ரல் அன்று வஃபாத் ஆனார்கள். எவ்வாறிருப்பினும் தாமதமாகவே செய்தி கிடைத்துள்ளது. ஜனாஸாவும் தாமதமாகவே தொழ வைக்கப்படுகிறது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூம் சிரியா ஜமாஅத்தின் மிகவும் களங்கமற்ற பழைய உறுப்பினர்களுள் ஒருவர். இவர் 5 வயதில் திருக்குர்ஆன் ஓதி முடித்தார். சிறு வயதிலேயே திருக்குர்ஆன் ஓதவும், தஜ்விதுடன் கிராஅத் ஓதும் திறமை பெற்றவர். நிறைய அஹ்மதி மக்களுக்கு தஜ்வதுல் குர்ஆன் கற்பித்தார். கண்ணியத்திற்குரிய முனீர் அல்ஹுஸ்னி சாஹிப் இவர் மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். இவர் சட்டம் படித்தார். வக்கீல் தொழில் நன்றாக இல்லை என்று நினைத்து பிறகு ஆசிரியர் பயிற்சி கற்று முழு நாட்டிலும் தெரிந்த ஆசிரியர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாடம் நடத்தினார்.

தலைமையாசிரியராக உயர்வு பெற்றார். மர்ஹூமுக்கு தப்லீகில் நல்ல ஆர்வம் இருந்தது. ஒவ்வொருவருக்கும் தப்லீக் செய்வார். சில வருடங்களுக்கு முன்பு அரபி டெஸ்கில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அரபி நூல்களை மீண்டும் ஒளிபரப்பப்பட்டபோது மொழிபெயர்த்து பரப்பப்பட்டபோது அன்னார் அனைத்தையும் வாசித்தார். எவ்வளவு காலம் அஹ்மதியாக இருந்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையில் என்ன கூறினார்கள் என்று இப்போதுதான் தெரிய வந்தது.

இப்போது உண்மையில் இஸ்லாம் அஹ்மதிய்யத் பற்றி புதிதாக தெரிந்து கொண்டிருக்கிறேன் என்று அன்னாரின் நல்லொழுக்க அழகிய சமூகத் தொடர்பு, கொடை, தற்சார்பு, தன்மானம், எந்த பணத்தாசையும் இன்றி பிறருக்கு உதவுதல் போன்ற விஷயங்களை அவர்களை அறிந்த ஒவ்வொருவரும் விளங்குகிறார். அது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அறியக்கூடிய ஒவ்வொருவரும் இதற்காகவே அன்னார் மீது அன்பு கொண்டனர்.

தமது பணிகளில் உறுதி, இன்முகம், தயைமிக்க தந்தையாக இருந்தார்கள். களங்கமற்ற கணவராக இருந்தார்கள். அன்னாரின் நட்பு வட்டம் பரந்தது. தொழுகை மற்றும் வணக்கங்களில் பேணுதல், ஏதாவது பணம் கிடைத்தால் சந்தா வழங்குவார். பல நேரங்களில் எல்லா பணத்தையும் சந்தாவாகக் கொடுத்து விடுவார். நினைவாக மூன்று மகன்கள் மூன்று மகள்கள் உள்ளனர். மூத்த மகன் முஹம்மது சாஹிப் இளைய மகன் ஜலாலுத்தீன் சாஹிப் ஆகியோர் அஹ்மதிகள்.

அன்னாருக்கு அல்லாஹ் மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையைக் காட்டுவானாக. தகுதியை உயர்த்துவானாக. அவரது சந்ததிகளுக்கு செய்த துஆக்களை அவர்கள் மீது நிறைவேற்றுவானாக. மற்ற பிள்ளைகளுக்கும் உண்மையை அறியும் வாய்ப்பை வழங்குவானாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் (வேதத்தையுடையவர்களிடத்தில்) எல்லா நபிமார்களின் மூலமும் உறுதிமொழி வாங்கிய நேரத்தை(யும் நினைத்துப் பாருங்கள்). வேதம், ஞானம் ஆகியவற்றிலிருந்து நான் உங்களுக்குக் கொடுத்து விட்டுப் பின்னர், உங்களிடமுள்ளதை மெய்ப்பிக்கக்கூடிய ஒரு தூதர் உங்களிடம் வந்தால், அவரிடம் நீங்கள் நம்பிக்கை கொண்டேயாக வேண்டும். இன்னும் அவருக்கு உதவியும் செய்ய வேண்டும். (மேலும்) நீங்கள் ஒப்புக் கொண்டு என் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று அவன் கூறியதற்கு, ஆம். நாங்கள் ஒப்புக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர். இப்பொழுது நீங்கள் சாட்சியாக இருங்கள். நானும் உங்களுடன் சாட்சி(களுள் ஒரு சாட்சி)யாக இருக்கின்றேன் என்றான். (3:82)

M.Y. Shahul Hameed, Melapalayam

இரண்டாவது ஜனாஸா, கண்ணியத்திற்குரிய அதிபுல் ஆபிது சாஹிப் தியூனஸ். 26 ஜூன் அன்று தமது 70–வது வயதில் வஃபாத் ஆனார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் அவரது பகுதியில் தனி அஹ்மதியாக இருந்தார். மிகவும் களங்கமற்றவர். ஜமாஅத் மற்றும் காலத்தின் இமாம் மீது பெரும் அன்பு கொண்டவர். தமது வாழ்நாள் முழுக்க மஸ்ஜிதில் கழித்தார். திருக்குர்ஆனின் மீது பேரன்பு கொண்டவர். அதிகமாக இறை தியானம் செய்பவர். ஜமாஅத் பற்றி தெரிய வந்ததும் தாமதமின்றி மர்கஸுக்கு வந்து உடனே பைஅத் செய்தார். வீரமிக்கவர். எவரைச் சந்தித்தாலும் அஹ்மதிய்யத்தை அறிமுகம் செய்வார். குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் நிறைய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் தமது ஈமானில் உறுதியாக நின்றார். பைஅத் செய்த முதல் நாளிலிருந்தே சந்தா கொடுக்கத் தொடங்கினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எழுத்துக்களில் பேரார்வம் உள்ளவர். ஜுமுஆ தொழுவதற்காக சுமார் 5 மணி நேரம் இரயில் பயணம் செய்து மர்கஸுக்கு வருபவராக இருந்தார். வஸிய்யத் பற்றி தெரிய வந்ததும் வஸிய்யத் திட்டத்தில் இணைந்தார்.

இளைஞர்களுக்கு இறைவழியில் பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவார். இறை வழியில் செலவு செய்தால்தான் இறைவன் எனது பொருளில் பரக்கத் வழங்கினான் என்று கூறி வந்தார். அவரது துஆ மற்றும் நல்ல விருப்பங்களை அவரது சந்ததிகளின் ஹக்கில் நிறைவேற்றுவானாக.

மூன்றாவது ஜனாஸா, கண்ணியத்திற்குரிய அமத்துஷ் ஷுகூர் சாஹிபா. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் மூத்த மகள். 3 செப்டம்பர் அன்று தமது 79 –ம் வயதில் வஃபாத் ஆனார். இந்த அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது உடைய தந்தை வழி பேத்தியாவார். மாமனார் வீட்டின் அடிப்படையில் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா மற்றும் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் உடைய தாய் வழி பேத்தியாவார்.

1940 –ல் காதியானில் ஏப்ரல் மாதம் பிறந்தார். ஆரம்பக் கல்வியைக் காதியானில் பெற்றார். பிறகு லாஹூரில் பிஎட் படித்தார். இவருக்கு இரு திருமணங்கள் நடந்தன. நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிபுடைய மகன் ஷஹீத்கான் சாஹிபுடன் திருமணம் நடந்தது. அவர் மூலம் இரண்டு மகன்களும் மூன்று மகள்களும் இருக்கிறார்கள். மூத்த மகன் ஆமிர் அஹ்மது கான் வாழ்வை அர்ப்பணித்தவர். தஹ்ரீகே ஜதீதில் இப்போது பணி செய்கிறார். இவரது இரண்டு மகள்வழிப் பேரன்கள் ஜாமிஆவில் கல்வி பயின்று வருகிறார்கள். இரண்டாவது திருமணம் டாக்டர் மிர்ஸா லயிக் சாஹிபுடன் நடந்தது. அவரிடம் இவருக்கு குழந்தை இல்லை. இவருக்கு ஜமாஅத் அடிப்படையில் பெரிய பணிகள் எதுவும் இல்லை. ஆனால் பொதுவாக பல்வேறு வழியில் ஜமாஅத்தில் பொறுப்புகளில் துறைகளில் லஜ்னாவுடைய பணிகளைச் செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

எழுதக்கூடிய அனைவரும் எழுதுகின்றனர்: மிகவும் ஒத்துழைப்பு நல்கக் கூடியவர். எளிமையானவர். நம்முடன் சேர்ந்து பணி செய்வார். எழுதவும் படிக்கவும் நல்ல ஆர்வம் இருந்தது. இவர் அம்மா ஜான் உடைய வாழ்க்கை பற்றி எழுதியுள்ளார். இரண்டாவது நூல் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா பற்றி எழுதியுள்ளார். முபாரக்கா கி கஹானி முபாரக்கா கி ஸுபானி என்ற நூல். மூன்றாவது நூலின் முன் வடிவம் முழுமை அடைந்துள்ளது. ஆனால் சூழ்நிலையினால் வெளி வரவில்லை. ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் (ரலி) உடைய மனைவி ஹஸ்ரத் ஸைனப் சாஹிபா (ரலி) உடைய வரலாறு மற்றும் வாழ்வு சம்பந்தப்பட்டது. இந்த மூன்று நூல்களையும் லஜ்னாவுக்கு ஒரு நல்ல படைப்புகள் ஆகும்.

அவரது மகள்வழி பேத்தி மலாஹத் கூறுகிறார்: எனது தாய்வழிப் பாட்டி, மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எப்போதும் புன்னகையோடு இருக்குமாறு கூறுவார்கள் என்று எப்போதும் கூறி வந்தார். இதனால் நான் எப்போதும் பார்த்துள்ளேன். அன்னாரின் இறுதி நோயின் வேளையில் கூட புன்னகையுடன் இருந்தார்கள். கஷ்டத்திலும் கூட சிரித்துக் கொண்டிருந்தார்கள். மிகவும் கஷ்டம் தரும் நோயாக இருந்தது. இறுதியில் தான் கேன்ஸர் என்று தெரிய வந்தது. ஆனால் மிகவும் தைரியம் மற்றும் பொறுமையுடன் சகித்துக் கொண்டார். ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறி வந்தார்கள். அவர் எப்போதும் ஒவ்வொரு துயரத்தையும் மிகவும் பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள் என்று கூறுவார்.

அல்லாஹ் அவருடன் மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையைக் காட்டுவானாக. அவரது குழந்தைகளிடமும் அடுத்த சந்ததிகளிடமும் கூட கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் பற்றுடன் நிலைத்திருக்கும் வாய்ப்பு தருவானாக. ஆம், இன்னொன்றும் விடுபட்டு விட்டது. இன்று குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமா ஆரம்பமாவதால் ஜுமுஆவுக்குப் பிறகு அஸரும் ஜமஅ செய்யப்படும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகம் தற்காலிகமானதாகும். இதனையே உங்களது வாழ்க்கையின் குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறு கருதுவது உலகவாதிகளின் பணியாகும். இவ்வுலக வாழ்க்கை வெறும் கேளிக்கையும், பொழுதுபோக்கும் மட்டுமே ஆகும் என்றுஅல்லாஹ் தெளிவாக கூறுகின்றான்.... ஆக, தனது முழு நாளும் கேலிக்கையிலேயே கழிந்து விட வேண்டும்; வேறு எந்தப் பணியும் செய்யக்கூடாது என்று ஓர் அறிவாளி விரும்புவாரா?..... மரணித்த பிறகு அல்லாஹ் உங்களிடம், நீங்கள் எவ்வளவு சொத்துக்களை, எவ்வளவு செல்வங்களை, எவ்வளவு குழந்தைகளை விட்டு விட்டு வந்துள்ளீர்கள் என்று கேட்க மாட்டான். மாறாக, நீங்கள் என்ன செயல்களை செய்துள்ளீர்கள்? என்றே மட்டுமே அவன் கேள்வி கேட்பான். எந்தெந்த தூய மாற்றங்களை நீங்கள் உங்களிடத்தில் ஏற்படுத்தினீர்கள்? நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்பட்டீர்களா? உங்களது மற்றும் உங்களது குழந்தைகளின் இறைவணக்கத்தை பாதுகாப்பதற்கு முயற்சி செய்தீர்களா? என்றே கேட்பான்... இதற்குரிய பதில் ஆம் என்று இருக்குமென்றால் பிறகு நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவாறு மார்க்க மற்றும் பௌதீக சுவர்க்கத்தின் வாரிசாகி விடுவீர்கள்.

(3 ஆகஸ்ட் 2019 அன்று ஆண்டு மாநாட்டில் லஜ்னாக்களுக்கு நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து....)

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: நாங்கள் அல்லாஹ்விடத்தும் எங்களுக்கு இறக்கப்பட்டதிலும், மேலும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் (மற்றும் இவருடைய) சந்ததிகள் ஆகியோருக்கு இறக்கப்பட்டதிலும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் (ஏனைய) எல்லா நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதிலும் நம்பிக்கை கொள்கின்றோம். அவர்களுள் எவரையும் மற்றோருக்கு வேறுபட்டவராகக் கருதுவதுமில்லை. நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டு நடப்பவர்களாவோம். (3:85

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

## "கஞ்சா" – CANNABIS AN UNSTOPPABLE WAR?

சமீபத்தில் U.K இல் கஞ்சா செடியிலிருந்து எடுக்கப்பட்ட கஞ்சாவின் என்ற பொருளின் மருத்துவ பயன்பாட்டைப் பற்றிய ஒரு விஷயம் அதிகமான மக்களின் கவனத்தை ஈர்த்தது. கடுமையான வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட 12 வயது சிறுவனின் தாய்தான் இந்த கஞ்சாவைப் பற்றிய விவாதத்திற்குக் காரணம்.

ஏனென்றால் அவளுடைய மகனுக்கு தினந்தோறும் வரக்கூடிய, உயிரை அச்சுறுத்தும் வலிப்பு நோயை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்த ஒரே மருந்து இந்த கஞ்சாதான். எனவே இந்த மருந்தை சட்டப்பூர்வமானதாக ஆக்க வேண்டும் என்பதே அந்த விவாதத்தின் நோக்கமாகும். சிறுவனின் மீது அதிகமான மக்களுக்கு இருந்த அனுதாபம் இதை உபயோகப்படுத்துவது தொடர்பான காரசாரமான விவாதத்திற்கு வித்திட்டது.

குழந்தைகளுக்கு வரக்கூடிய கை கால் வலிப்பின் கடுமையை குறைப்பதற்கு கஞ்சாவிலுள்ள Cannabidiol (CBD) பலனளிப்பதாக தெரிய வந்துள்ளது. இந்த சிறுவனின் பிரச்சனைக்குப் பிறகு U.K வில் உள்ள Misuse of Drugs–ன் Advisory Council ஆலோசனையின்பேரில் Home Secretary சாஜிது ஜாவீதின் ஒப்புதலுடன் மருத்துவர்கள் கஞ்சாவை மருந்திற்காக பரிந்துரை செய்ய இருக்கிறார்கள்.

USA–ல் 31 மாநிலங்களில் கஞ்சாவின் மருத்துவ பயன்பாடு ஏற்கனவே சட்டமாக்கப்பட்டுவிட்டது. கஞ்சாவில் உள்ள மருத்துவ குணங்களால் அதனை உபயோகிப்பது சரியானதே என வாதித்தாலும் கஞ்சாவை ஆரோக்கியத்திற்காக பயன்படுத்துவதைக் காட்டிலும் அதனை உட்கொள்ளும்போது மனதிற்கு கிழுகிழுப்பு ஏற்படுவதாலும் மனத் தளர்வு, இன்பம் போன்ற உணர்வுகள் ஏற்படுவதாலும் இதனை பெரும்பாலும் பொழுதுபோக்கிற்காகவே பயன்படுத்துகிறார்கள். சாதாரணமான முறையில் கஞ்சாவை பயன்படுத்துவதை சட்டப்பூர்வமாக்குவது பற்றி சில மாதங்களாகவே கருத்து கேட்கப்பட்டு வருகின்றது.

பிரிட்டனில் சட்டத்திற்குப் புறம்பாக கஞ்சாதான் அதிகமாகவும், பரவலாகவும் பயன்படுத்தப்பட்டுவரும் போதைப் பொருளாகும். மரிஜுவானா, கஞ்சாவின், மயக்க மருந்து, புல, போதை மூலிகை, ச்சூஃப், களைச்செடி என்றெல்லாம் கஞ்சா பல்வேறு பெயர்களால் அறியப்படுகிறது. மிக வீரியமிக்கதான ஷங்க் என்ற பெயரால் அறியப்படும் ஒருவகை கஞ்சாவில் அடங்கியுள்ள THC (Tetrahydro-cannabinol) என்ற அதிக செறிவுள்ள மூலப்பொருளின் காரணமாக வளர்க்கப்படுகிறது.

USA –ல் 2016–ஆம் ஆண்டு கணக்கின்படி தங்கள் வாழ்நாளில் ஏதேனும் ஒரு கட்டத்தில் மார்ஜுனாவை பயன்படுத்தும் அமெரிக்க மக்களின் எண்ணிக்கை 118 மில்லியன் ஆகும். அதாவது மக்களில் மூன்றில் ஒருவர் இதனை உபயோகிக்கின்றார்கள். அமெரிக்காவில் ஒன்பது மாநிலங்களிலும், வாஷிங்டன் DC யிலும் கஞ்சாவை கேளிக்கைக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கஞ்சாவை டிசம்பர் 2013–ஆம் ஆண்டு கேளிக்கைக்காக விற்பனை செய்வதை சட்டபூர்வமாக்கிய முதல் நாடு உருகுவே ஆகும். கனடா பாராளுமன்றம் கஞ்சாவை உபயோகிப்பதற்கான சட்டத்தை கடந்த செப்டம்பர் மாதத்தில் நிறைவேற்றியது. உலகிலேயே கஞ்சாவை வாங்குவதற்கும் உபயோகிப்பதற்கும் சட்டப்படி அனுமதி வழங்கியுள்ள இரண்டாவது நாடு கனடா ஆகும். இப்போது மேலும் பல நாடுகளும் இந்த கஞ்சாவைப் போன்ற போதைப் பொருள்களை மருந்திற்காக மட்டுமல்லாமல் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுத்துவதை சட்டமாக்கலாம் என்ற எண்ணத்தில் உள்ளனர். இத்தருணத்தில் இஸ்லாம் கஞ்சாவினுடைய பயன்பாட்டைப் பற்றி என்ன கூறுகிறது?

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் கஞ்சாவைப் பயன்படுத்துவது பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் என்ன? என்று கேட்கப்பட்டபோது அன்னார் இவ்வாறு பதிலளித்தார்கள்: போதைப் பொருள்கள் மக்களுக்கு தீங்கு விளைவிக்கின்ற காரணத்தால் அவை தடை செய்யப்பட்டுள்ளன. ஒருவனை இறைவணக்கத்திலிருந்து விலக்கக்கூடிய எந்த ஒரு தீமையும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஏற்கனவே மது அருந்தி வந்தவர்களுக்கு போதையின் காரணமாக அவர்களால் தொழுகையில் சரியான கவனம் செலுத்த முடியவில்லை. அதன் காரணமாக மது தடை செய்யப்பட்டது.

ஏனைய போதைப் பொருட்களைப் போன்று சிகரெட்டை ஏன் தடை செய்யவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹும், மஹ்தியும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகருமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள், சிகரெட் தடை செய்யப்படவில்லை என்றாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் இந்த சிகரெட் இருந்திருக்குமென்றால் அவைகள் தடை செய்யப்பட்டிருக்கும் என்று கூறியுள்ளார்கள்.

சிகரெட்டின் மோசமான விளைவுகளை இப்போது மக்கள் உணர்ந்துள்ளதையும் அதனால் சிகரெட் அட்டையில் தெளிவான எச்சரிக்கை லேபிள் ஒட்டப்பட்டுள்ளதையும் நாம் பார்க்கிறோம். கேன்சர், நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள், அதைப்போன்ற கடுமையான நோய்கள் சிகரெட்டுடன் தொடர்புடையது என்பது எல்லோரும் அறிந்ததே! எனவே எப்பொருளும் அவை சிறிதளவு தீமை விளைவிக்கின்றதாக இருப்பின் அந்த பொருள்கள் தடுக்கப்பட்டுள்ளது என்று இஸ்லாம் கூறுகிறது.

இஸ்லாம் கூறுவது என்னவென்றால் சில முக்கியமான தருணங்களில் மனித உயிரைப் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு அதன் பயன் இருக்குமானால் அவற்றை உபயோகிக்க அனுமதி தரப்பட்டுள்ளது. கஞ்சாவில் மருத்துவ ரீதியான சில நன்மைகள் இருக்கின்றன என்றாலும் அதனை அதிக அளவில் உட்கொள்கின்றபோது அவர்களின் மனநிலை மற்றும் சூழ்நிலையைப் பொறுத்து அவர்களுக்கு குழப்பம், மாயத்தோற்றம், பதற்றம், சித்தம் போன்ற விரும்பத்தகாத அனுபவங்கள் ஏற்படுவதாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சிலருக்கு மாயை, திரிபுணர்ச்சி போன்ற அறிகுறிகளுடன் மனரீதியான நோய் ஏற்படுகிறது.

போதை மருந்துகளை வழக்கமாக உட்கொள்பவர்களுக்கு உளப்பிணி என்ற மனரீதியான நோய் ஏற்படுவதற்கான இரு மடங்கு அபாயம் உள்ளது. அல்லது அவர்கள் நாள்பட்ட மனச்சிதைவுக்கு ஆளாகின்றார்கள். நீண்ட காலமாக போதைப் பொருள் பயன்படுத்துபவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுவதன் மூலம் அவர்களின் செயல் நோக்கம் குறைவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் நீண்ட கால பயன்பாட்டினால் அறிவாற்றலில் மீளமுடியாத அளவுக்கு குறைபாடு ஏற்படுவதாக சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்பவர்களுக்கு அவன் அவர்களுக்குரிய கூலிகளை முழுமையாக வழங்குவான். அல்லாஹ் அநீதி இழைப்பவரை நேசிப்பதில்லை. (3:58)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

மேலும் ஹுஸூர் அவர்கள் போதை மருந்துகள் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படை தத்துவம் என்ன என்பதை இவ்வாறு விளக்குகின்றார்கள்:

முக்கியமான விஷயம் என்னவென்றால் போதை மருந்துகள் உபயோகிப்பது தவறானதாக இருப்பினும் முயற்சி மற்றும் சீர்திருத்தம் செய்வதே நோக்கமாக இருக்க வேண்டும். இதனை உபயோகிக்கும் நபர்கள் மீது வெறுப்பு கொள்ளக்கூடாது. மாறாக, அவர்களை அந்த பழக்கத்திலிருந்து காப்பாற்றுவதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். அடிப்படை கொள்கை என்னவென்றால், உங்களுக்கு தீமை பயக்கக்கூடியது என நீங்கள் கருதும் ஒரு விஷயம் மற்றவர்களுக்கும் தீமை பயக்கும் என்று நீங்கள் கருத வேண்டும். அதேபோன்று உங்களை காப்பாற்ற விரும்பும் ஒரு விஷயத்திலிருந்து மற்றவர்களையும் நீங்கள் காப்பாற்ற நினைக்க வேண்டும்.

எந்தவொரு விஷயத்திலும் இஸ்லாத்தின் கட்டளை தெளிவாக உள்ளது. அதாவது போதைப் பொருட்கள் மற்றும் போதை மருந்துகள் பயன்படுத்துவது தவறாகும். உதாரணத்திற்கு, மதுவையும் மது குடிப்பவர்களையும் மது மரிமாறுபவர்களையும், மது வாங்குபவர்களையும், மது விற்பவர்களையும் அல்லாஹ் சபிக்கின்றான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இதற்கு என்ன பொருள்? இஸ்லாத்தில் போதை மருந்துகள் பயன்படுத்துபவர்கள் மீது சட்டப்படியான தண்டனை இல்லாமலிருக்கலாம். ஆயினும் சில நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் உண்டு. அதன் நோக்கம் அவர்களை சீர்திருத்துவதே ஆகும். எனவே இப்படிப்பட்ட சாபத்திற்கு ஆளாவதிலிருந்தும் இறைவனுடைய தண்டனையிலிருந்தும் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

ஹுஸூர் அவர்கள் திருக்குர்ஆனிலிருந்தும், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்தும் போதை மருந்துகளைப் பற்றிய இஸ்லாத்தின் வழிகாட்டுதலை குறிப்பிட்டார்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: அவர்கள் உம்மிடம் மதுவைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் வினவுகின்றனர். இவ்விரண்டிலும் மக்களுக்குப் பெரும்பாவமும் (பாதிப்பும்) சில பயன்களும் உள்ளன. இவற்றின் பாவம் இவற்றிலுள்ள பயனைவிட மிகவும் பெரியதாகும் என்று நீர் கூறுவீராக. (2:220)

அவற்றுள் சில நன்மைகள் இருப்பதாக திருக்குர்ஆன் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆயினும் கஞ்சா போன்ற போதை மருந்துகளில் நன்மையை விட தீங்குகளே அதிகமாக உள்ளன. அதிலுள்ள மூலப்பொருள் ஒருவரின் சிந்தனை ஆற்றலை அழித்து அவர்களின் அறிவாற்றலை பாதிக்கச் செய்கின்றது என்று முஸ்லீம்கள் எச்சரிக்கப்படுகின்றார்கள்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் கூறுவதை என்னவென்று புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மயக்க நிலையில் இருக்கும்போது தொழுகையை அணுகாதீர்கள். (4:44)

நபிமொழியில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒவ்வொரு போதைப்பொருளும் சட்டவிரோதமானதாகும். சிறிய அளவு போதை உண்டாக்கக்கூடியதாக இருப்பினும் அவை சட்டவிரோதமானதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக விளக்கமான முறையில் கவனமூட்டுகின்றார்கள். சுவிஷேஷம் கூறுவதைப் போன்று திருக்குர்ஆன் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு மது அருந்த அனுமதி வழங்கவில்லை. அதனால் அவர்களுக்கு போதை ஏற்படாவிட்டாலும் சரியே. அதற்கு மாறாக, திருக்குர்ஆன் மது அருந்துதலை முற்றிலும் தடை செய்துள்ளது. இல்லையெனில் இறைவனை அடைவதற்கான வழியிலிருந்தும், இறைவனுடன் உரையாடுவதிலிருந்தும் நீங்கள் இழப்பிற்காளாவீர்கள்.

இறைவன் அம்மனிதர்களின் அசுத்தங்களை தூய்மைப்படுத்துவதிலிருந்தும் அவர்கள் இழப்பிற்காளாவார்கள். அவை அனைத்தும் சாத்தானுடையத கண்டுபிடிப்புகள் என்றும் அதற்கெதிராக நீங்கள் உங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: போதைப் பொருள்கள் சிறிதளவு உட்கொள்வதால் தீங்கு ஏற்படுவதில்லையென்றாலும் அவை தடுக்கப்பட்டதற்கான காரணம் பொழுதுபோக்கிற்காக உபயோகிக்கும் போதை மருந்துகள் ஒரு தனி மனிதனை மட்டும் பாதிப்புக்கு உள்ளாக்குவதில்லை. மாறாக, ஒட்டுமொத்த சமுதாயத்தையே பாதிப்புக்கு உள்ளாக்குகிறது என்பதனாலேயாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மது அருந்தும் செல்வந்தர்கள் அவர்களின் தாக்கத்தினால் போதைக்கு ஆளாகும் ஏனைய மக்களின் பாவங்களையும் சேர்த்தே சுமக்கிறார்கள். அறிவுடையவர்கள் என வாதிக்கின்றவர்களே! அறிந்து கொள்ளுங்கள். இவ்வுலகம் நிரந்தரமானது அல்ல. எனவே நீங்கள் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். எல்லா வகையான ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் எல்லா விதமான போதையிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.

மது அருந்துவது மட்டும் ஒரு ம னிதனை அழிப்பதில்லை. ஒபியம், கஞ்சாவீன், கஞ்சா செடி, டர்ஹி போன்ற போதை உண்டாக்கும் அனைத்துமே அழிவை ஏற்படுத்தக் கூடியவைகளாகும். அவை மனதைக் கொடுத்து வாழ்க்கையை அழித்து விடுகிறது. எனவே இதுபோன்ற எல்லா பழக்கங்களிலிருந்தும் விலகி விடுங்கள். ஒவ்வொரு வருடமும் போதைப் பொருளுக்கு அடிமையாகி ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள். இருப்பினும் மக்கள் ஏன் போதை பழக்கத்திற்கு ஆளாகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவன் போதை பொருளுக்கு அடிமையாகி விட்டால் அதன் பிறகு அதிலிருந்து விடுபடுவது கஷ்டமாகும். போதைப் பொருள் என்றால் என்றால் என்ன? ஒருபுறம் அவை வாழ்க்கையை அழித்து விடுகிறது. மறுபுறம் அவைகளே வாழ்வாதாரமாகவும் உள்ளது. போதைக்கு அடிமையான ஒருவனுக்கு ஒரு டோஸ் அளவு போதைப்பொருள் கிடைக்காவிட்டால் அப்போது அவனது நிலையானது அவனை மரணத்திற்கே இட்டுச்செல்லும்.

ஆதாரம்: The Review of Religions, August 2018
"CANNABIS AN UNSTOPPABLE WAR?" பக்கம் 14-20

தமிழில்: டாக்டர். நிஸார் முஹம்மது, காதியான்

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டபின் நிராகரித்து பிறகு நிராகரிப்பில் மேலும் முன்னேறுகின்றவர்களின் பாவமன்னிப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவர்களே வழி தவறியவர்களாவர். (3:91)

A.Basheer Ahmad, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 10 Oct 2019 Issue No. 41

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கொள்ளும் சிந்தையில் அந்த அறிவற்ற மனிதன் ஈடுபடுகின்றான். அது அற்புதத்தின் ஆழத்தில் இருக்கிறது. மேலும் அதன் தத்துவவங்கள் புவி அறிவு மற்றும் மேலோட்ட எண்ணங்களினால் திறக்கப்படுவதில்லை. அதனை மறுக்க அவன் திரும்புகையில் நபித்துவத்தின் ஆன்மாவை மறுத்து விடுகிறான்.

மேலும் சந்தேகங்கள் மற்றும் குழப்பங்களின் ஒரு பெரும் குவியலை சேர்த்து விடுகிறான். அது அவனின் பாக்கியமின்மைக்கு காரணமாக ஆகி விடுகிறது. இவரும் நம்மைப் போன்ற ஒரு மனிதரே. உண்ணுகிறார்; பருகுகிறார். மேலும் மனிதத்தன்மை உடையவர் ஆவார். அவரின் ஆற்றல்கள் நம்மை விட எவ்வாறு அதிகமாக இருக்க முடியும்? ஆன்மீக சக்தி மற்றும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் தாக்கம் அவரின் ஆற்றல்களில் சிறப்பானதாக எவ்வாறு வந்து விட முடியும்?

ஆன்மீக சக்தி மற்றும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் தாக்கம் அவரின் ஆற்றல்களில் சிறப்பானதாக எவ்வாறு வந்து விட முடியும் என எப்போதாவது கூறிவிடுகிறார்கள். அந்தோ! இந்த வகையான பேச்சுக்களையும், ஆட்சேபணைகளையும் கூறி விடுகிறார்கள். இதன் காரணமாக தற்போது நான் கூறியதற்கேற்ப, நபித்துவத்தின் ஆன்மைாவை அவர்கள் மறுத்து விடுகிறார்கள். சாதாரணமான முறையில் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் அசாதாரணமான முறையில் ஆட்சேபணை செய்கிறார்கள்.

சிந்திப்பதற்கும் புரிவதற்கும் உரிய இடமாகும். இப்போது இது அறிந்தும் மேலும் வெளிப்படையாக நபிமார்கள் (அலை) அவர்களின் இருப்பை மறுப்பது அல்லாமல் வேறு என்ன? தத்துவவாதி எனக் கூறிக்கொண்டு நாத்திகர்கள் சிலை வணங்கிகளாக ஆகிவிட்ட அவர்களுக்கு அறிவு மற்றும் புத்தியின் மீது பெருமையா என்ன? இறைவனின் மறைவான ஆற்றல்கள் இல்ஹாம் மற்றும் வஹீ இல்லாமல் ஒருபோதும் தன் ஆச்சரியங்களை காண்பிப்பதில்லை. அது வஹீ மற்றும் இல்ஹாம் என்ற வடிவில் தென்படுகின்றன.

**நபியை அடையாளங்கண்டு கொள்பவரே அறிவுள்ளவர் ஆவார்**

அவன் உலகில் தன் நபியை அனுப்பினான். இது இறைவனின் அருள் மற்றும் கருணையின் எதிர்பார்ப்பு ஆகும். எவர் நபியை அடையாளங்கண்டு கொள்கிறாரோ அவர் அறிவாளி ஆவார். ஏனெனில் அவர் இறைவனை அடையாளங்கண்டு கொள்கிறார். மேலும் நபியை மறுப்பவர் அறிவற்றவர் ஆவார். ஏனெனில் நபித்துவத்தை மறுப்பது இறை மறுப்பைக் கட்டாயமானதாக ஆக்கி விடுகின்றது. மேலும் எவர் இறைநேசரை அடையாளங்கண்டு கொள்கிறாரோ அவர் நபியை அடையாளங்கண்டு கொள்கிறார். இப்போது நிதான உள்ளத்துடன் சற்று சிந்தித்துப் பாருங்கள். இறைவன் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இயக்கத்தை உலகில் வெளிப்படுத்தினான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் வெளிப்படுத்தினான். ஆனால் இன்று 1300 ஆண்டுகளுக்குப் பின் தற்போதைய 14 ஆம் நூற்றாண்டின் 15 வருடங்கள் கழிந்து விட்டன. இதனை ஆரியர்கள், பிராமணர்கள், தத்துவவாதிகள், நாத்திகர்கள் அல்லது கிறித்தவர்கள் முன்னால் எடுத்துக் கூறினால் அவர்கள் சிரிக்கின்றார்கள். மேலும் எள்ளி நகையாடுகின்றார்கள்.

ஒரு பக்கம் மார்க்கங்கள் அதிகரித்துள்ளது. இவ்வாறான சிரமமான நேரத்தில் இந்த விஷயத்தை முன் வைப்பது மேலும் மக்களை நம்ப வைப்பது மிகவும் கஷ்டமான விஷயமாக ஆகிவிட்டது. மேலும் இஸ்லாம் மற்றும் அதன் விஷயங்கள் ஒரு கட்டுக்கதையாக கருதப்பட்டது. ஆனால் இறைவன் إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ (அல் ஹிஜ்ர் 10) என்ற வாக்குறுதியைத் தந்து சுயமே திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் பாதுகாப்பின் பொறுப்பை எடுத்துக் கொண்டு முஸ்லிம்களை இந்த சிரமத்திலிருந்து காப்பாற்றினான். மேலும் குழப்பத்தில் விழ விடவில்லை. எனவே இந்த இயக்கத்தை மதிப்பவர்கள் மேலும் இதிலிருந்து பயன் அடையும் அந்த மக்கள் அருளுக்குரியவர்கள் ஆவர்.

அசல் விஷயம் இதுவாகும். மனித இயல்பின் தனித்துவம் அவன் தப்பெண்ணத்தின் பக்கம் உடனே திரும்புகிறான். சான்று கிடைக்கவில்லை எனில் அது முற்றிலும் சரியானதுதான். உட்புறமாகவே மக்கள் ஒரு கட்டுக்கதையாக நினைத்து திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தை கைவிட்டு விடலாம்.

பாருங்கள்! உதாரணமாக, உள்ளே சப்தம் வருகிறது எனில் வெளியில் உள்ளவர் எவ்வாறிருப்பினும் உள்ளே ஏதோ மனிதர் நிச்சயம் இருக்கிறார் என்றே நினைப்பார். ஆனால் அவர் இரண்டு நான்கு நாட்கள் வரை உள்ளிலிருந்து யாரும் வராததை பார்க்கும்போது பிறகு அவரின் எண்ணம் மாறத் தொடங்குகிறது. மனிதனாக இருந்தால் அவனுக்கு உண்ணல் பருகுதலின் தேவை ஏற்படும். மேலும் அவன் அவசியம் வெளியே வருவான்.

எனவே பிறகு ஏதோ உள்ளே சென்று உள்ளது என புரிந்து கொள்கிறார். நபித்துவத்தின் ஒளிகள் மற்றும் அருட்கள் வலி வலாயத்தின் வருகின்றன. இந்த தத்துவ மற்றும் வெளிச்சத்தின் காலத்தில் வெளிப்படவில்லை எனில் முஸ்லிம்களின் சந்ததிகள் முஸ்லிம்களின் வீட்டில் இருந்து கொண்டு இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனை ஒரு கட்டுக்கதையாக மற்றும் பழங்கதையாக கருதுவார்கள். மேலும் இஸ்லாத்துடன் அவர்களுக்கு எந்த தொடர்பும் இருக்காது. இவ்வாறு இஸ்லாத்தை கைவிடும் தொடர்பு ஏற்படும். ஆனால் இல்லை! இறைவனின் தன்மானம், அவனின் வாக்கு நிறைவேற்றலின் துடிப்பு எப்போது இவ்வாறு ஆகுவதை அனுமதித்துள்ளது, நான் இப்போது கூறியதுபோல் إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ (அல் ஹிஜ்ர் 10) என்று இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 78–81 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad